# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 24 திங்கட்கிழமை 08.07.2024 கதிர் 294







# ஜனாதிபதித் தேர்தலைத் தடுக்கக் கோரும் மனு நிராகரித்துத் தீர்ப்பளித்தது உயர்நீதிமன்றம்!

**ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் விளக்கமளிக்கும் வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் இன்று நிராகரித்தது.**

**அத்துடன் நீதிமன்றக் கட்டணமாக ஒரு இலட்சம் ரூபா செலுத்துமாறும் மனுதாரருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.**

**நீதிமன்றக் கட்டணத்தை ஒரு மாதத்துக்குள் செலுத்த வேண்டும் எனவும் மனுதாரருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.**

**பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற ஆயம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.**

**இந்த மனுவைத் தொழிலதிபர் சி.டி.லெனவ சமர்ப்பித்திருந்தார்.**

2➤



## திருடர்களின் சதி முறியடிக்கப்படும்

### சஜித் சூளுரை



அரசமைப்பில் உள்ள ஓட்டைகள் ஊடாக பதவியைத் தக்கவைத்துக்கொள்ள தற்போதைய ஜனாதிபதிக்கு வாய்ப்பில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கம்பஹாவில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"அரசமைப்பில் உள்ள ஓட்டைகளை ஆராய்வதைத் தற்போதைய ஜனாதிபதியின் சீடர்கள் கடமையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

2➤

## போலி மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான மற்றுமொரு முயற்சி குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் தெரிவிப்பு

போலியான உற்பத்தியாளர்களின் பெயர்களை குறிப்பிட்டு இலங்கைக்கு மருந்துகளை கொண்டு வருவதற்கு கொள்வனவு கோரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சந்தேகத்திற்கிடமான மருந்து விநியோகஸ்தரால் தரக்குறைவான மருந்துகளை இறக்குமதி செய்தமை தொடர்பிலான வழக்கு நீதவான் நீதிமன்றில் நிலுவையில் உள்ள நிலையில், இவ்வாறு மீண்டும் மருந்துகளை இறக்குமதி



செய்வதற்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக மருத்துவ நிபுணர் ஜி. ஜி .சமல் சஞ்சீவ குறிப்பிட்டுள்ளார்.

குறித்த விநியோகஸ்தர் தொடர்பில் குற்றப் புலனாய் வுத் திணைக்களம் நீதி மன்றில் உண்மைகளை தெரிவித்தையடுத்து, சந்தேகநபர் சட்டப் பூர்வ உரிமை இல்லாத இந்திய மருந்து நிறுவனம் ஒன்றின் பெயரையே குறிப்பிட்டுள்ளார்

2➤

## பலத்த பாதுகாப்பின் மத்தியில் வெளியேறினார் வைத்தியர்!

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா வைத்தியசாலை விடுதியில் இருந்து வெளியேறிச் சென்றார்.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பதில் அத்தியட்சகர் பதவியில் இருந்து வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவை இடமாற்றும் முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வைத்தியசாலை முன்பாக நேற்று இரவு ஆரம்பித்த கண்டன ஆர்ப்பாட்டம் அதிகளவிலான மக்களின் பங்கேற்புடன் தொடர்ச்சியாக இன்றும் நடைபெற்ற நிலையில்

2➤



## அத்துருகிரியவில் இருவர் சுட்டுப் படுகொலை பிரபல சிங்களப் பாடகி உள்ளிட்ட 4 பேர் காயம்

அத்துருகிரிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் பிரபல சிங்களப் பாடகி உள்ளிட்ட 4 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் இன்று முற்பகல் நடத்தப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தவர்கள் ஹோமாகம



வைத்தியசாலை மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் துப்பாக்கி பிரயோகத்தில் பிரபல வர்த்தகரான சுரேந்திர வசந்த உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

அத்துருகிரிய நகரில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு அருகில் உள்ள அழகு நிலையம் ஒன்றின் திறப்பு விழாவின்போதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிதாரிகள் பயணித்தனர் எனக் கூறப்படும் வாகனம் அருகில் உள்ள சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் அத்துருகிரிய பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, சம்பவத்தின்

2➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## போலி மருந்துகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் குறிப்பிட்டது.

தரக்குறைவான ஹியூமோனோகுளோபியுலின் மோசடி மாத்திரமன்றி, ஏற்கனவே கடந்த காலங்களில் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு தற்போது பாவனையில் உள்ள கணிசமான அளவு மருந்து வகைகள் தொடர்பிலும் விசாரணை நடத்த வேண்டியது அவசியமாக உள்ளதாகவும் மருத்துவர் சமல் சஞ்சீவ மேலும் தெரிவித்துள்ளார். (ரெஜ-19)

## அத்துருகிரியவில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போது துப்பாக்கிதாரிகள் பயன்படுத்திய கார் கடுவெல, கொரதொட்ட பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

## திருடர்களின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போதைய ஜனாதிபதிக்கு மக்கள் ஆணை என்பது கிடையாது.

அவர் திருடர்களைப் பாதுகாக்கும் பணிகளையே முன்னெடுத்துள்ளார்.

சிலருக்கு அதிகாரம் இல்லாமல் உறக்கம் வருவதில்லை.

அவ்வாறானவர்கள் பல சதிகளை முன்னெடுத்து ஆட்சியைத் தக்க வைக்க முயல்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்திக்கு அவ்வாறான எந்தத் தேவையும் இல்லை.

எமக்குத் திருடர்களுடன் எந்தக் கொடுக்கல் வாங்கலும் இல்லை.

மக்களின் சக்தியே எமது பலம். திருடர்களின் சதிகள் முறியடிக்கப்படும்." - என்றார். (05

## ஜனாதிபதித்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விசாரணையின்போது, அரசமைப்பின் பிரகாரம், ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்களேயாகும் என்று சட்டமா அதிபர் திணைக்களம் உயர்நீதிமன்றத்துக்கு இன்று தெரியப்படுத்தியிருந்தது.

சட்டமா அதிபர் சார்பில் உயர்நீதிமன்றத்தில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் கனிஸ்க டிசில்வா இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

அத்துடன், குறித்த மனுவை தள்ளுபடி செய்யக்கோரி ஆட்சேபனை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடையும் காலப்பகுதி தொடர்பில் விளக்கமளிக்கும் வரை, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதைத் தடுக்க உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு உயர்நீதிமன்றத்தால் இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, விஜித் மலல்கொட, முர்து பெர்னாண்டோ, பிரித்தி பத்மன் சூரசேன மற்றும் துரைராஜா ஆகியோர் அடங்கிய 5 பேர் கொண்ட நீதியரசர்கள் முன்னிலையில் இந்த மனு விசாரிக்கப்பட்டது. (05)

## பலத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்திய அத்தியட்சகர் வெளியேறினார்.

இதனையடுத்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை முன்பாக நடைபெற்ற போராட்டமும் நிறைவுக்கு வந்தது.

போராட்டகாரர்களுடன் கலந்துரையாடிய வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா, தானே தற்போதும் வைத்திய அத்தியட்சகர் எனவும் தற்போது சுகவீன விடுமுறையில் இருப்பதாகவும், குறித்த நிலைமை தொடர்பில் பேசுவதற்காக கொழும்புக்குச் செல்லவுள்ளேன் என தெரிவித்து வெளியேறினார். (01)

# பாடசாலைகள் நாளை வழமைபோல் இயங்கும்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

*நாட்டிலுள்ள அனைத்து அரச பாடசாலைகளிலும் நாளை வழமை போல் கல்வி நடவடிக்கை இடம்பெறும் என்று கல்வி அமைச்சு விசேட அறிக்கையொன்றின் ஊடாக இன்று அறிவித்துள்ளது. அதிபர், ஆசிரியர்கள் நாளை சுகவீன விடுமுறையில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ள நிலையிலேயே கல்வி அமைச்சு இவ்வாறு அறிவித்துள்ளது. (05)*

# பொன்சேகாவும் ராஜிதவும் விரைவில் அரசுடன் இணைவு

## மறைமுகமாக அம்பலப்படுத்தினார் ஹர்சன

ஐக்கிய மக்கள் சக்தியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் கட்சியிலிருந்து வெளியேறவுள்ளனர் என்று தெரிவித்துள்ள கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருண, அவர்கள் டொலர்களில் வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளார். கம்பஹா மற்றும் களுத்துறையைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கட்சியிலிருந்து விரைவில் வெளியேறவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் விபசாரம் செய்யும் இவர்கள் டொலர்கள் மூலம் கிடைத்த வெகுமதிகளுக்கு விலைபோயுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

"நாங்கள் ஒருசில நாடாளுமன்ற உறுப்பினர்களையே இழக்கப் போகின்றோம். ஆனால், தங்கள் பதவிகளைத் துறந்துவிட்டு எதிர்க் கட்சியில் இணைவதற்குப் பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாராகவுள்ளனர்" - என்றும் ஹர்சன ராஜகருண எம்.பி. மேலும் குறிப்பிட்டுள்ளார். (05)

# நீரில் மூழ்கி குழந்தை பலி

மூன்று வயதுடைய குழந்தையொன்று வீட்டின் நீர்த் தொட்டியில் வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளது.

மீத்தெனிய கிழக்கு பகுதியைச் சேர்ந்த குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது என்று மீத்தெனிய பொலிஸார் தெரிவித்துள்ளனர். குழந்தையின் தாய் தனது 9 வயது குழந்தையையும், உயிரிழந்த மூன்று வயது குழந்தையையும் குளிப்பாட்டுவதற்காக வீட்டுக்கு வெளியே உள்ள நீர்த் தொட்டி இருக்கும் இடத்துக்கு அழைத்துச் சென்றுள்ளார். பின்னர் அவரது ஒன்பது வயது குழந்தையின் உடலைக் கழுவி வீட்டினுள்ளே அழைத்துச் சென்ற தாய் மூன்று வயது குழந்தையை நீர்த் தொட்டிக்கு அருகில் இருந்தி விட்டுச் சென்றுள்ளார்.

மீண்டும் வீட்டிலிருந்து வெளியே வந்த தாய் மூன்று வயது குழந்தையைத் தேடியபோது குழந்தை நீர்த் தொட்டிக்குள் வீழ்ந்து கிடப்பதை அவதானித்துள்ளார்.

பின்னர் குழந்தை மீட்கப்பட்டு மீத்தெனிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி குழந்தை உயிரிழந்துள்ளது என்று வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர். (05)

# ஜனாதிபதி தேர்தல் திகதி அறிவிப்பு ஜூலை 17 இன் பின்னர் இடம்பெறும்

## தேர்தல் ஆணைக்குழு

*ஜூலை 17 ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் திகதி அறிவிக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.*

*ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இது குறித்து தெரிவிக்கையில், அரசியலமைப்பின் பிரகாரம் ஜூலை 17 ஆம் திகதியின் பின்னர் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் திகதியை அறிவிப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைக்கப்பெறும் என குறிப்பிட்டுள்ளார்.*

*ஜனாதிபதித் தேர்தல் செப்டம்பர் 17 முதல் ஒக்டோபர் 16 வரை நடைபெறும் என தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே அறிவித்திருந்தது. இதன்படி, தேர்தல்கள் ஆணைக்குழு கலந்தாலோசித்து ஜனாதிபதி தேர்தலுக்கான தீர்க்கமான திகதியை தீர்மானிக்கும் எனவும், இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்கு 2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியல் பயன்படுத்தப்பட உள்ளது எனவும் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.*

*(ரெஜ–21)*





செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ஆளுநர் செந்தில் தொண்டமான் மலேசியாவிற்கு இன்று உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டார்

மலேசியா பாராளுமன்றத்திற்கு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானுக்கு தாப்பா நாடாளுமன்ற உறுப்பினரும்

ம.இ.கா தேசியத் துணைத் தலைவருமான டத்தோ ஸ்ரீ சரவணன் முருகனால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மூவின மக்கள் வாழும் நாடான இலங்கையில், மூவின மக்களுக்கும் பாரபட்சம் இன்றி சிறந்த தலைமைத்துவத்தை வழங்கும் தலைவர் என்ற ரீதியில் ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு இந்த விசேட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மலேசியா பல்லின மக்கள் வாழும் ஒரு நாடு. அங்குள்ள இந்தியா வம்சாவளி தமிழர்களுடன், மூவின மக்களும் ஒன்றாக வாழ்வதற்கு முன்னெடுத்த வழிமுறைகள் குறித்தும், தனது தலைமைத்துவ பண்புகள் மற்றும் தொடர் வேலைத்திட்டம் குறித்தும் கலந்துரையாட கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானுக்கு அவர் இந்த விசேட அழைப்பினை விடுத்துள்ளார்.

இதையடுத்து, ஆளுநர் செந்தில் தொண்டமான் இன்று மலேசியாவிற்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார். (04)



## கட்சிகளில் பிளவுகளை உருவாக்குவது தேர்தலில் தோல்வியையே ஏற்படுத்தும்

### ஐ.தே.க. பாடம் கற்க வேண்டும் என்கிறார் நாமல் எம்.பி.



கடந்த காலங்களில் அரசியல் கட்சிகளை பிளவுபடுத்தி தேர்தலில் வெற்றியீட்டக் கூடியதாக இருந்திருக்கலாம், ஆனால் தற்போது அவ்வாறு செய்வது சாத்தியப்படாது என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கட்சிகளை பிளவுபடுத்தி தேர்தலில் வெற்றி பெறுவது காலாவதியான ஓர் உத்தி ஆகும், ஐக்கிய தேசியக் கட்சியில் ஏற்பட்டிருந்த பிளவு காரணமாக 2019 ஆம் ஆண்டு அக்கட்சி அடைந்த படுதோல்வி குறித்து சிந்தித்து செயற்பட வேண்டும். எனவே, கட்சியில் ஏற்படுகின்ற பிளவுகளால் தேர்தல்களில் படுதோல்வியையே சந்திக்க நேரிடும் எனவும் நாமல் ராஜபக்ஷ எம்.பி. குறிப்பிட்டுள்ளார்.

அவ்வாறே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட பிளவுகளால் சிதறுண்டு காணப்படுவதாகவும் குறிப்பிட்ட அவர், ஆகையினால் இவற்றை பாடமாகக் கொண்டு அரசியல்வாதிகள் செய்ய வேண்டியது கட்சிகளை பிளவுபடுத்துவதல்ல, மாறாக தம்மை பலப்படுத்தி ஒன்றிணைந்து முன்னோக்கி செல்வதே ஆகும் எனவும் மேலும் தெரிவித்துள்ளார். (ரெஜ-18)

## இலங்கை மற்றும் மாலைதீவிற்கான ரோட்டரி ஆளுனராக தொழிநுட்ப தொழில் முனைவர் சுசேனா ரணதுங்க நியமனம்

*2024-25 ஆம் ஆண்டிற்கான இலங்கை மற்றும் மாலைதீவிற்கான ரோட்டரி கழகத்தின் ஆளுநராக இலங்கையின் சிறந்த தொழில்நுட்ப தொழில் முனைவோர்களில் ஒருவரான சுசேனா ரணதுங்க நியமிக்கப்பட்டுள்ளார்.*



Creative Technology Solutions Pvt Ltd *நிறுவனத்தின் இணை நிறுவனர், பணிப்பாளராகவும், 2002 ஆம் ஆண்டு இலங்கையின் மென்பொருள் துறையினூடாக மீண்டும் உள்நுழைந்த பின் அவர பிஓஜ அடிப்படையிலான சுகாதார பயன்பாட்டு மென்பொருள் மேம்படுத்தல் நிறுவனமான* Cambio Software Engineering Pvt Limited *இன் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.*

*ரோட்டரிக்கான அவரது முக்கிய திட்டங்களில், முதலாவது ரோட்டரி கழகத்தின் பெண் ஆளுனரான கௌரி ராஜனின் வழிகாட்டுதலின் கீழ், இலங்கையின் முதல் மனித இதய வால்வு மற்றும் திசு வங்கியை அமைப்பதற்கான திட்டத்தலைவராக செயற்பட்டதும் முதன்மையானதாகும்.*

'Manchester Metropolitan (UK) *பல்கலைகழகத்தில் தகவல் முறைமை மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் பட்டமும், மற்றும்* Keele University (UK) *இல் தகவல் தொழில்நுட்பத்தில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர்* Creative *போன்ற பல்வேறு இணையத்தள மேம்படுத்தல் துறைகளில் ஈடுபட்டுள்ள இலங்கையின் சிறந்த தொழில்நுட்ப தொழில்முனைவோருமாவார்.*

*ரோட்டரி ஸ்ரீலங்கா மற்றும் மாலைதீவில் இளம் மற்றும் ஆற்றல் மிக்க உறுப்பினர்களை அதிகரிக்கச் செய்வதே எனது இலக்காகும் என்பதையும் திரு ரணதுங்க தெரிவித்துள்ளார்.*

*ரோட்டரி ஸ்ரீலங்காவில் ஆளுநராக அங்கம் வகிப்பதற்கு முன்னதாக , திரு. ரணதுங்க சமூக சேவையின் தலைவராகவும், சர்வதேச சேவையின் தலைவராகவும் முக்கிய பதவிகளை வகித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.*

*2017-18 ஆம் ஆண்டிற்கான சிறந்த ரோட்டேரியன் விருது மற்றும் 2018-2019 இல் சிறந்த மனிதாபிமான சேவைகள் விருதும் இவருக்கு வழங்கப்பட்டன.*

*பிறவி இதய நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 2.4 பில்லியன் ரூபாயை திரட்டிய லிட்டில் ஹீட்ஸ் திட்டத்தின் நிறுவன உறுப்பினராகவும் இவர் இருந்தார். மேலும் நவீன தொழில்நுட்பத்திற்கான ஆர்தர் சி கிளார்க் மையத்தின் நிர்வாக அங்கத்தவராகவும்*

*உள்ளார். மேலும் 2018 மற்றும் 19 ஆம் ஆண்டுகளில் அவரது நிறுவனத்திற்கு இலங்கை தேசிய வர்த்தக சம்மேளனத்தின் சிறந்த வணிக விருதும் வழங்கப்பட்டது.*



# பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தல் நிறைவடைவு இடதுசாரிக் கூட்டணி அதிக இடங்களில் வெற்றி




பிரான்ஸ் நாடாளுமன்றத் தேர்தலில் இடதுசாரிக் கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. எனினும், பிரான்ஸ் பொதுத்தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதன்காரணமாக அங்கு கூட்டணி ஆட்சி அமைய உள்ளது.

577 இடங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை தொகுதிகள் எந்தக் கட்சிக்குக் கிடைக்கும் என்பதை தீர்மானிக்கும் இரண்டாம் மற்றும் இறுதிக் கட்ட வாக்குப்பதிவு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இரண்டாம் உலகப்போருக்குப் பின் மீண்டும் பல ஆண்டுகள் கழித்து, பிரான்சில் வலதுசாரி சித்தாந்தங்களைப் பின்பற்றும் மரைன் லீ பென்னின் 'தேசிய பேரணி கட்சி' அதிகாரத்தை கைப்பற்றுமென்ற எதிர்பார்ப்பு பெரிதாக நிலவியது. அதன்படி, பிரான்ஸ் நாடாளுமன்றத்துக்கு ஜூன் 30 ஆம் திகதி நடைபெற்ற முதல்கட்டத் தேர்தலில் தீவிர வலதுசாரிக் கட்சியான 'தேசியப் பேரணி' முன்னிலை பெற்றது.

இந்த நிலையில், இறுதிக் கட்டத் தேர்தலில் பதிவான வாக்குகள் ஞாயிற்றுக்கிழமை எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டு வருகின்றன. அதில் வலதுசாரிகளுக்கு அதிர்ச்சியளிக்கும் விதமாக இடதுசாரி முன்னணி கூட்டணி அதிக இடங்களில் (180 இடங்கள்) வெற்றி பெற்றுள்ளது. வலதுசாரி கூட்டணி மூன்றாவது இடத்துக்கு (140 இடங்கள்) தள்ளப்பட்டுள்ளது. அந்நாட்டின் அதிபர் இமானுவேல் மக்ரோனின் செண்ட்ரிஸ்ட் கட்சி இரண்டாவது இடத்தில் (160 இடங்கள்) உள்ளது.

289 இடங்களில் வெற்றி பெற்றால் மட்டுமே பெரும பான்மையுடன் ஆட்சியமைக்க முடியும் என்கிற சூழலில், இந்தத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து, இடதுசாரிகளுடன் கூட்டணி அமைத்து அதிபர் இமானுவேல் மக்ரோனின் செண்ட்ரிஸ்ட் கட்சி புதிய கூட்டணி அரசை அமைக்கலாம் என்றும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. இடதுசாரிக் கூட்டணியில் உள்ள முக்கிய கட்சிகளான லா பிரான்ஸ் இன்சோமைஸ் (எல் எஃப் ஐ) கட்சித் தலைவர் ஜீன் லக் மெலென்சாண் பிரதமராக தேர்ந்தெடுக்கப்படுவாரா அல்லது சோசலிஸ்ட் கட்சியின் தலைவர் ஒலிவர் பேஃர் பிரதமராக தேர்ந்தெடுக்கப்படுவாரா என்ற எதிர்பார்ப்பும் பரவலாக நிலவுகிறது.

இதனிடையே, அக்கூட்டணியில் அங்கம் வகிகும் கிரீன்ஸ் கட்சித் தலைவர் மரைன் டாண்டெலியரும் பிரதமர் பதவிக்கான போட்டியில் நீடிக்கிறார்.

இந்த நிலையில், பிரான்ஸ் பிரதமர் கப்ரியேல் அட்டல் ராஜினாமாச் செய்யப்போவதாக அறிவித்தார். புதிய கூட்டணி அரசு பொறுப்பேற்பதைத் தொடர்ந்து அவர் இந்த முடிவை ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார். இதனிடையே, அதிபர் இமானுவேல் மக்ரோன் புதிய பிரதமர் குறித்த அறிவிப்பை தற்போது வெளியிடப் போவதில்லை என்றும், புதிய அரசு அமையும் வரை காத்திருக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார். (04)



# யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ள வலியுறுத்தி இஸ்ரேலியர்கள் நேற்று பெரும் போராட்டம்!

ஹமாஸ் படையினரிடம் உள்ள பிணைக் கைதிகளை மீட்க வழிவகுக்கும் வகையில், யுத்த நிறுத்தம் மேற்கொள்ள வலியுறுத்தி இஸ்ரேலியர்கள் நாடுதழுவிய அளவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இஸ்ரேல் ராணுவத்துக்கும், பாலஸ்தீனத்தின் காஸா முனையில் ஆட்சிபுரிந்த ஹமாஸ் படையினருக்கும் இடையிலான போர் சுமார் 9 மாதங்களாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் இதுவரை 38,000 க்கும் அதிகமான பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளதாக காஸா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஹமாஸ் படையினர் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்ற இஸ்ரேலியர்களை மீட்கும் வகையில், போர் நிறுத்தம் மேற்கொள்ள வலியுறுத்தி, இஸ்ரேலில் நாடு தழுவிய அளவில் பொதுமக்கள் ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் அவர்கள் இஸ்ரேல் பிரதமர் பதவியில் இருந்து பெஞ்சமின் நெதன்யாகு விலகவும் வலியுறுத்தினர்

இந்தப் போராட்டத்தின்போது பிரதான சாலைகளில் மறியலில் ஈடுபட்ட இஸ்ரேலியர்கள், அந்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் இல்லத்துக்கு எதிரிலும் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும், ஹமாஸ் படையினரால் கொல்லப்பட்ட மற்றும் கடத்தப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில், காஸா எல்லையையொட்டி, 1,500 கறுப்பு மற்றும் மஞ்சள் பலூன்களை போராட்டக்காரர்கள் பறக்கவிட்டனர்.

கடந்த ஆண்டு நவம்பரில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே ஏற்பட்ட போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, ஹமாஸிடம் பிணைக் கைதிகளாக இருந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் விடுவிக்கப்பட்டனர். சுமார் 120 பேர் ஹமாஸிடம் தொடர்ந்து பிணைக் கைதிகளாக உள்ளனர். அவர்களில் 40 க்கும் மேற்பட்டவர்கள் இறந்துவிட்டதாக ஏற்கெனவே இஸ்ரேல் தெரிவித்த நிலையில், போர் நீடித்தால் மேலும் பல பிணைக் கைதிகள் உயிரிழக்கக் கூடும் என்று அஞ்சப்படுகிறது.


போரால் பாதிக்கப்பட்டுள்ள ஹேபா ராடி என்ற பாலஸ்தீன பெண் கூறுகையில், 'போரால் 9 மாதங்கள் துயரத்தில் கழிந்துவிட்டன. போர் நிறுத்தம் என்பது தொலைதூர கனவாக உள்ளது' என்றார்.

இதனிடையே சனிக்கிழமை நள்ளிரவு மற்றும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை வரையிலான நேரத்தில், மத்திய காஸாவின் ஸவாய்டா நகரில் உள்ள வீடொன்றின் மீது இஸ்ரேல் வீசிய குண்டு விழுந்து 6 பாலஸ்தீனர்கள், காஸா சிட்டியின் மேற்கே உள்ள வீட்டின் மீது இஸ்ரேல் வீசிய குண்டு விழுந்து மூவர் என மொத்தம் 9 பேர் உயிரிழந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னதாக, காஸாவில் பொதுமக்கள் தஞ்சமடைந்திருந்த ஒரு பள்ளிக்கூடத்தின் மீது இஸ்ரேல் சனிக்கிழமை நடத்திய வான்வழித் தாக்குதலில் 16 பேர் கொல்லப்பட்டதாகவும், 50 பேர் காயமடைந்ததாகவும் காஸா சுகாதார அமைச்சகம் தெரிவித்தது.

இஸ்ரேலும் லெபனானும் எல்லைகளைப் பகிர்ந்துகொள்ளும் நிலையில், ஹமாஸுக்கு ஆதரவாக எல்லைப் பகுதிகளில் லெபனானின் ஹிஸ்புல்லா படையினர் இஸ்ரேல் மீது தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில், இஸ்ரேலை நோக்கி 20 ஏவுகணைகள் ஏவப்பட்டதாக ஹிஸ்புல்லா படையினர் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர். எல்லையில் இருந்து 30 கிலோமீற்றருக்கும் அதிகமான தொலைவில் உள்ள பகுதிகளைக் குறிவைத்து இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. (04)

# லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டித் தொடர் ஜப்னா கிங்ஸ் அணி தொடர்ந்தும் முதலிடத்தில்!



லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டித் தொடரில் நேற்று கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ், தம்புள்ளை சிக்சர்ஸ் அணிகளுக்கிடையில் தம்புள்ளை ரங்கிரி சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் தம்புள்ளை சிக்சர்ஸ் அணி அபாரமான வெற்றி ஒன்றை பெற்று இந்த தொடரில் தமது இருப்பை தக்க வைத்துள்ளது. இது தொடரில் அவர்களின் முதல் வெற்றியாகும்.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தம்புள்ளை சிக்சர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணி சார்பாக ரஹ்மனுல்லா குரபாஷ், அஞ்சலோ பெரேரா ஜோடி சிறந்த ஆரம்பத்தை வழங்கினர். 73 ஓட்டங்களை ஆரம்ப விக்கெட் இணைப்பாட்டமாக பெற்ற வேளையில் அஞ்சலோ பெரேரா 41ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ரஹ்மனுல்லா குர்பாஷ் 36 ஓட்டங்களை பெற்ற வேளையில் டுஸான் ஹேமந்தவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார். சிறந்த ஆரம்பத்தை அடுத்தடுத்த விக்கெட்களை கைப்பற்றி கட்டுப்படுத்தியது தம்புள்ளை அணி. எனினும், சாமிக்க கருணாரட்ன அதிரடியாக துடுப்பாடி ஓட்ட எண்ணிக்கையினை உயர்த்தினார். கிளன் பிலிப்ஸ் நிதானம் கலந்த வேகத்துடன் துடுப்பாடி ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். சாமிக்க ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும், பிலிப்ஸ் 56 ஓட்டங்களையும் பெற்றனர். 20 ஓவர்கள் நிறைவில் கொழும்பு அணி 6 விக்கெட்களை இழந்து184 ஓட்டங்களை பெற்றது.

தம்புள்ளை அணியின் பந்து வீச்சில் மொஹமட் நபி, நுவான் பிரதீப் இருவரும் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர். 185 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் துடுப்பாடிய தம்புள்ளை சிக்சர்ஸ் அணியின் ஆரம்பம் அபாரமாக அமைந்தது. ரீஷா ஹென்றிக்ஸ், குஷல் பெரேரா இணைந்து பெற்ற ஆரம்பமானது கடினமான இலக்கை துரத்தக் கூடியதாக அமைந்தது. ஒனபதாவது ஓவரில் இருவரும் சத இணைப்பாட்டத்தை பூர்த்தி செய்தனர். இந்த தொடரில் பெறப்பட்ட முதலாவது ஆரம்ப சத இணைப்பாட்டம் இதுவாகும்.

154 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பூர்த்தி செய்த வேளையில் ரீஷா ஹென்றிக்ஸ் தஸ்கின் அஹமட்டின் பந்துவீச்சில் 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, அதே ஓவரில் குஷல் பெரேராவும் 80 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். இருவரும் ஆட்டமிழந்ததை தொடர்ந்து நிதானமாக துடுப்பாடி மார்க் சப்மன், இசுரு உதார இருவரும் போட்டியை வெற்றிகரமாக நிறைவு செய்தனர். இந்தப் போட்டியில் 8 விக்கெட்களால் தம்புள்ளை சிக்சர்ஸ் அணி வெற்றிபெற்றது.

தொடரில் சகல அணிகளும் நான்கு போட்டிகளைப் பூர்த்தி செய்துள்ள நிலையில் ஜப்னா கிங்ஸ் அணி முதலிடத்திலும், கோல் மாவெல்ஸ் அணி இரண்டாமிடத்திலும் தலா 6 புள்ளிகளோடு உள்ளன. கொழும்பு ஸ்ட்ரைக்கர்ஸ் அணி 4 புள்ளிகளோடு மூன்றாமிடத்திலும், தம்புள்ளை சிக்சர்ஸ் அணி 2 புள்ளிகளோடு நான்காமிடத்திலும், கண்டி பல்கன்ஸ் அணி 2 புள்ளிகளோடு ஐந்தாமிடத்திலும் உள்ளன. இன்றைய தினம் போட்டிகள் எதுவுமில்லாத ஓய்வு நாளாகும். நாளை மீண்டும் தம்புள்ளையில் போட்டிகள் ஆரம்பிக்கவுள்ளன. (04)

# முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் முஹர்ரம் புதுவருட நிகழ்வு கிருலப்பனையில்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

முஹற்ரம் புதுவருடத்தை சிறப்பிக்கும் முகமாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கொழும்பு கிருலப்பொன ஜு/ம்ஆ மஸ்ஜிதுடன் இணைந்து நடாத்தும் முஹற்ரம் புதுவருட நிகழ்வு - 2024 நிகழ்வு இன்று திங்கட்கிழமை மாலை 6.45 முதல் இரவு 8.30 மணி வரை கொழும்பு - 06 இல் அமைந்துள்ள கிருலப்பன ஜு/ம்ஆ மஸ்ஜிதில் இடம்பெறுகிறது.

இந்நிகழ்வில் புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் எம்.எச்.ஏ.எம். றிப்லான் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், திணைக்கள அதிகாரிகள் உட்பட உலமாக்கள், அரச உயர் அதிகாரிகள், கொழும்பு பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள், பள்ளிவாசல் குழு உறுப்பினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், மற்றும் ஜமாஅத்தார்கள் எனப்பலரும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

ஹிஜ்ரி 1446 ஆவது முஹற்ரம் புது வருட நிகழ்வாக இந்நிகழ்வு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.




# சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு காரைதீவில் நிதியுதவி வழங்கும் நிகழ்வு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

சீரற்ற காலநிலையினால் இவ்வருட ஆரம்பப் பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக அம்பாறை மாவட்ட காரைதீவு-1, 6, 7 மற்றும் 11 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் பத்தொன்பது வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு பாதிக்கப்பட்டிருந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கான முற்பண தொகை 10,000 ஷரூபா வழங்கும் நிகழ்வு காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி.ராகுலநாயகி சசிந்திரன் தலைமையில் அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தரின் ஒருங்கிணைப்பில் காரைதீவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் எஸ். பார்த்திபன், நிர்வாக கிராம உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரிவுகளுக்கு பொறுப்பான கிராம உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# உயர்தர தொழிநுட்ப பிரிவில் அம்பாறை மாவட்டத்தில் முதலாம் நிலை பெற்ற மாணவி பாராட்டிக் கௌரவிப்பு



(மாளிகைக்காடு செய்தியாளர்)

அண்மையில் வெளியான க.பொ.த (உ.த) பரீட்சை – 2023 (2024) பெறுபேறுகளின் அடிப்படையில் உயர்தர தொழிநுட்ப பிரிவில் அம்பாறை மாவட்ட ரீதியாக முதலாம் நிலையைப் பெற்று கல்முனை கல்வி வலய கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவி ஐ.எப். இஸ்ரா ஹஷ்பானி சாதித்துள்ளார். மேலும் இந்த பாடசாலையை சேர்ந்த மாணவியான எம்.எம்.எப். பத்தூனா மூன்றாம் நிலை பெற்றுள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் முதல் நிலையைப் பெற்ற கல்முனை கல்வி வலய பாடசாலை மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ். சஹதுல் நஜீம் தலைமையில் வியாழக்கிழமை (04) மஹ்மூத் மகளிர் கல்லூரியில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி. சுஜாதா குலேந்திரகுமார் கலந்து கொண்டார்.

இதன்போது உயர்தர தொழிநுட்பப் பிரிவில் அம்பாறை மாவட்டத்தில் முதலாம் நிலையினை பெற்ற இஸ்ரா ஹஷ்பானி பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

இந்த மாணவிகளை சிறந்த முறையில் வழிநடத்தி நெறிப்படுத்திய பகுதித் தலைவர், சிறந்த புள்ளிகளைப் பெற்ற மாணவிகளுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் பாடசாலைச் சமூகம் சார்பாக வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதாக மஹ்மூத் மகளிர் கல்லூரி அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் தெரிவித்துள்ளார்.





## விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தினது 8 செயற்திட்டங்கள் இடையில் கைவிடப்பட்டுள்ளன

### கணக்காய்வு அலுவலகம் தெரிவிப்பு

விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால்கடந்த 8 வருடங்களில் (2013 முதல் 2020 வரை) ஆரம்பிக்கப்பட்ட 8 செயற்திட்டங்கள் பணிகள் நிறைவு பெறாமல் கைவிடப்பட்டுள்ளதுடன், அத்திட்டங்களுக்காக 586.02 மில்லியன் ஷரூபா செலவிடப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமதி 1,604.21 மில்லியன் ஷரூபாவாகும். அத்துடன், பூர்த்தி செய்யப்பட வேண்டிய 7 வேலைத்திட்டங்கள் கடந்த வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யப்படவில்லை எனவும், ஐந்து வேலைத்திட்டங்களின் தாமத காலம் 19 மாதங்களில் இருந்து 70 மாதங்கள் வரை நீடித்துள்ளதாகவும் மேற்படி கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய இரண்டு திட்டங்களைப் பொறுத்தவரை, அவற்றின் திட்ட நிறைவு திகதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த வருட இறுதியின்போது விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் இத்திட்டங்களுக்காக 802.52 மில்லியன் ஷரூபாவை செலவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ரெஜ-17)

## அழகுக்கலை நிலைய செயற்பாடுகளால் நாட்டில் பாரிய பாதிப்புக்கள் ஏற்படலாம்

### சட்டங்கள் தேவை என்கிறது பொது சுகாதார பரிசோதகர் சங்கம்



அழகுசாதனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை ஒழுங்குபடுத்துதல் தொடர்பில் நாட்டில் முறையான சட்டம் இல்லாத காரணத்தினால், எதிர்காலத்தில் மேலும் துரதிர்ஷ்டவசமான மரணங்கள், நோய்கள் மற்றும் ஒவ்வாமைகள் பதிவாகலாம் என இலங்கை பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

அழகுசாதனப் பொருட்கள் விடயத்தில் நாட்டில் கடுமையான சட்டம் அமுல்படுத்தப்பட வேண்டிய தருணம் வந்துள்ளதாக சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தகவல் வழங்குகையில், "மருந்து ஒழுங்குபடுத்தல் அதிகார சபை சட்டத்தில் அழகுசாதனப் பொருட்கள் உள்ளடக்கப்படவில்லை. இத்தகைய நிலையில், பயிற்சி பெறாதவர்கள் ஊசி ஏற்றல் மற்றும் அறுவை சிகிச்சை ஆகியனவற்றை செய்கின்றனர். இதற்கென உரிய சட்டங்கள் இல்லாத நிலையில், அவற்றை சட்டபூர்வமாக்குவதற்கான முனைப்புகளையும் காண முடியவில்லை. இதனால், எந்தவொரு தகுதியும் இல்லாதவர்கள் அழகுக் கலை தொழிலில் ஈடுபடுகிறார்கள். இவர்களுக்கு இத்துறையில் நிபுணத்துவம், பயிற்சி அல்லது அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் எதுவும் இல்லை. ஆனால், இவர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுப்பதற்கான வழிமுறைகளும் இல்லை. காரணம், அதற்கான சட்டம் இலங்கையில் இல்லை. இதன் விளைவாக எதிர்காலத்தில் நாட்டில் துரதிஷ்டவசமான மரணங்கள் பதிவாகலாம். இத்தகைய சம்பவங்கள் நடைபெற்ற பின்னர் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பதிலாக இப்போதே அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதே பொருத்தமாக அமையும்" - என்றார். (ரெஜ-16)










## புதிய கலாசார உத்தியோகத்தர் வரவேற்று பாராட்டி கௌரவிப்பு

(எம்.எஸ்.ஸாகிர்)

சாய்ந்தமருதில் இயங்கும் பாரம்பரிய பொல்லடிக் கலை மன்றமான மருதூர்கலைமன்றத்தின் ஏற்பாட்டில், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ள புதிய கலாசார உத்தியோகத்தர் ஏ.எம். தௌபீக்கை வரவேற்று, பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையில் வெள்ளிக்கிழமை (05) இடம் பெற்றது.

சாய்ந்தமருதில் மறுகி வரும் பொல்லடி எனும் களிகம்புக் கலையை சிறியோருக்கு பயிற்றுவித்தும் மற்றும் பழமையான சிறந்த கலைஞர்களைக் கொண்டு சிறப்பாக இயங்கிவரும் சாய்ந்தமருது மருதூர் கலைமன்றத்தின் ஆயுட் காலத் தலைவர் சிரேஷ்ட அண்ணாவியார் ஏ. இஸ்ஸதீன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், சாய்ந்தமருது பிரதேச செயலகத்தில் நிரந்தரமாக நியமிக்கப்பட்டுள்ள புதிய கலாசார உத்தியோகத்தர் ஏ. எம். தௌபீக் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இதன்போது மருதூர் கலை மன்றத்தின் உறுப்பினர்கள் பொல்லடி அடித்தும், மன்றத்தின் ஆயுட்காலத் தலைவர் ஏ. இஸ்ஸதீன், பொதுச் செயலாளர் எம்.எஸ்.எம். ஸாகிர், பொருளாளர் ஐ.எல்.ஏ. முபாரக், உப தலைவர் எம்.எம்.மன்சூர் ஆகியோர் மாலை அணிவித்தும் கலாசார உத்தியோகத்தருக்கு வரவேற்பு அளித்தனர்.

அவர் தற்காலிகமாக இருந்து செய்த சேவையைப் பாராட்டியதுடன், ஏ.எம் தௌபீக் சாய்ந்தமருதுக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டது சாய்ந்தமருதுக்கும், எமது பிரதேச கலைஞர்களுக்கும் கிடைத்த வரப்பிரசாதம் என்றும், இதன் காரணமாக கலைஞர்கள் மேலும் மேலும் பல நன்மைகளை அடைவார்கள் என்றும் இவர் இருக்கும் இந்தக் காலத்தை கலைஞர்கள் பிரயோசிதமுள்ளதாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டனர்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.07.2024இல் வெளியிடப்பெற்றது.